பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 22 | செவ்வாய்க்கிழமை | 03.06.2024 | அதிர்வு 308

**சீரற்ற காலநிலையால்**

## இன்று மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளின் விவரம்

சீரற்ற காலநிலையால் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டப் பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை 06▶

# ஆளும் கட்சிக் கூட்டத்தில் மோதல்! குணதிலக வைத்தியசாலையில்!!

## மஹிந்தானந்த மீது குற்றச்சாட்டு



ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தின் போது ஏற்பட்ட மோதலில் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது, கண்டி மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷவுக்கும் சக நாடாளுமன்ற உறுப்பினரான 06▶

# ஜனாதிபதியாக ரணில் தொடரட்டும்; தமிழ்க் கட்சிகளின் விருப்பம் இதுவே!

## ஐ.தே.க. பொதுச்செயலர் பாலித தெரிவிப்பு

**“ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப்பதவியில் தொடர வேண்டும் என்பதைத் தமிழ்பேசும் கட்சிகளும் விரும்புகின்றன. அக்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் கூடத் தெரிவித்துள்ளனர்.”**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.** 06▶



# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மாயமான இருவர் சடலங்களாக மீட்பு!



காலி, தவலம பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயிருந்த இரண்டு ஆண்களும் நேற்று 06▶



கடந்த ஆண்டு மார்ச்சில் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் தடுத்தமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான பரிசீலனையை நேற்று மீண்டும் ஒத்திவைத்தது உயர் நீதிமன்றம்.

இந்த மனுக்களை விசாரிக்க வேண்டிய நீதியரசர்களின் ஆயத்தில் ஒருவர் சமூகம் தராதமையால் நேற்றைய அமர்வை நாளை வரைத் தள்ளி வைத்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

ஐக்கிய மக்கள் சக்தி, மாற்றுக் 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# சுற்றாடல் தின நிகழ்விற்காக ஒதுக்கப்படும் பணத்தை மக்களுக்காக பயன்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தகவல்



“எதிர்வரும் ஜுன் மாதம் 05 ஆம் திகதி நடைபெறவிருந்த உலக சுற்றாடல் தினத்தின் தேசிய கொண்டாட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.”

– இவ்வாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அரசாங்கம் என்ற வகையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க ஆரம்பித்துள்ளோம். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ள நிலைமை சீரானவுடன் அந்த பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெங்கு போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் உள்ளது. அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளோம். மேலும் சேதமடைந்துள்ள பாலங்கள், வடிகான்கள், வீதிகள் ஆகியவற்றைப் புனரமைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் நலனுக்கான நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளன. இந்த நடவடிக்கையில் பணத்தை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல் தேவையான பணிகளை செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஆனால், இந்த நேரத்தில் சிலர் விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்து அரசியல் ஆதாயம் பெற முயற்சிக்கின்றனர். ஆனால் நடக்க வேண்டியது அதுவல்ல. இந்த நேரத்தில் விமர்சனங்களை விட முக்கியமானது இடம்பெயர்ந்த மக்களை விடுவிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான்.

மேலும், வெள்ள நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் அதனை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பது அவசியம். அதற்காக அரசாங்கம் என்ற ரீதியில் எவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதை கண்டறியுமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், நாளை (இன்று) முதல் 10 நாள்களுக்குள் உள்ளூராட்சி மன்றங்களில் இதுவரை நிரந்தர நியமனம் பெறாத 8,400 ஊழியர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தி நிரந்தர நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தைக் குழப்புவதற்கு ஒரு குழுவினர் செயல்படுவதையும் நாம் அறிவோம். எனவே, எந்த சூழ்நிலையிலும் அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலக சுற்றாடல் தினத்தின் தேசிய விழாவை ஜுன் 05 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விழாவை இரத்து செய்து, அந்த நிதி ஒதுக்கீட்டை மோசமான காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆனாலும் உலக சுற்றாடல் தின தேசிய விழாவிற்காக நாடளாவிய ரீதியில் பத்து லட்சம் செடிகளை நடும் பணியை நாம் முன்னெடுக்கவுள்ளோம். உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, ஒவ்வொரு வீட்டிலும் ஒரு செடியை நட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.” – என்றார்.

# பொலிஸாரின் அவசர இலக்கமான 119இற்கு தவறான தகவலை தந்தவருக்குத் தண்டனை




பொலிஸாரின் அவசர இலக்கமான 119க்கு தவறான தகவல்களுடன் அழைப்பு விடுத்த நபருக்கு 5 வருட இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதிவான் எம்.பாரூக்தீன் இந்த உத்தரவை வழங்கினார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 06 ஆம் திகதி, பொலிஸாரின் அவசர இலக்கமான 119 க்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்தேகநபர் கினிகத்தேன காவல்துறை நிலைய அதிகாரிகள் மது விருந்து நடத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தகவலின் அடிப்படையில் ஹட்டன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கினிகத்தேனை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அவசரமாகப் பரிசோதித்தபோது அது தொடர்பான தகவல்கள் போலியானவை எனத் தெரியவந்துள்ளது.

இதன்படி, சந்தேகத்திற்கிடமான அழைப்பை விடுத்த நபரிடம் விசாரணை நடத்தப்பட்டு, சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து, அவருக்கு இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு 10,000 ரூபாவை வழங்குமாறு சந்தேக நபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.







# நாடு முழுவதும் 250 புதிய பாலங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தகவல்

"தேசிய மட்ட அபிவிருத்தித் திட்டங்களின் பயனை கிராமப்புற மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் வீதி கட்டமைப்பை மேம்படுத்தி நாடு முழுவதும் 250 புதிய பாலங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2014-2024 காலப்பகுதியில் நெதர்லாந்து ஜென்சன் பிரிஜிங் நிறுவனத்தினால் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் 750 கிராமிய பாலங்களை வெற்றிகரமாக நிர்மாணித்து நிறைவு செய்தமையை முன்னிட்டு நேற்று முற்பகல் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கையில் ஜென்சன் பிரிஜிங் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட 750 பாலங்களின் பணிகள் நிறைவடைந்ததை இன்று நாங்கள் ஒன்றிணைந்து கொண்டாடுகிறோம். இது அந்த நிறுவனம் வெற்றிகரமாக நிறைவேற்றிய மாபெரும் பணி என்பதைக் கூற வேண்டும். இந்த கிராமப்புறப் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்ட பிரதேசங்கள் பற்றி எனக்குத் தெரியும். அவை மிகவும் பின்தங்கிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலங்களால் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

மேலும், இந்த விரிவான வீதிக் கட்டமைப்பு, முக்கிய அதிவேகப்பதைகளுக்கு பொருள்களைக் கொண்டு செல்வதற்கும், கொழும்பு அல்லது பிற முக்கிய நகரங்களுக்கு பொருள்களை அனுப்புவதற்கும் உதவுகிறது. எனவே, இத்திட்டம் மிகவும் முக்கியமான திட்டம் என்பதை குறிப்பிட வேண்டும். மேலும் இதுபோன்ற 250 பாலங்களை அமைக்க எதிர்பார்த்துள்ளோம்.

நம் நாட்டில் 2019 ஆம் ஆண்டில் 15 வீதமாக இருந்த வறுமை விகிதம் தற்போது 25 வீதமாக அதிகரித்துள்ளது. 2032 ஆம் ஆண்டிற்குள் 10 வீதம் வரை குறைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்பதைக் கூற வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது, குறைந்த வருமானம் பெறும் மக்களும் அதன் மூலம் பயன்பெறுவதை உறுதி செய்ய வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள மக்களை மையமாகக் கொண்டு பல பரிமாண வறுமையை 10 வீதம் வரைக் குறைப்பது எமது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

அந்த இலக்கை நோக்கிச் செல்ல இது போன்ற திட்டங்கள் நமக்கு உதவுகின்றன. எனவே இந்த திட்டங்களுக்கு பங்களித்த நெதர்லாந்து அரசாங்கத்திற்கு நான் நன்றி கூறுகிறேன்.

வடமாகாணத்தில் மக்களின் சுகாதார சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் 04 புதிய வைத்தியசாலைகளை திறப்பதற்கு நெதர்லாந்து தூதுவர் அண்மையில் எம்முடன் இணைந்து கொண்டார்.




இந்த இரண்டு திட்டங்களும் இலங்கையின் கிராமப்புற சமூகத்தை பலப்படுத்தும். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், இந்த திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றை முன்னெடுத்துச் செல்ல நான் நடவடிக்கை எடுத்தேன்.

இலங்கைக்குச் சொந்தமான புராதன பீரங்கிகளை மீள இலங்கைக்கு வழங்கியமை தொடர்பில் அரசுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் வலுவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மோசமான வானிலை காரணமாக வெள்ள நிலைமையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதுவரை பல உயிர்கள் பலியாகியுள்ளன. இந்த அனர்த்தத்தினால் முற்றாக அழிந்த வீடுகளை இராணுவத்தினரின் பங்களிப்புடன் அரச செலவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பகுதியளவில் சேதமடைந்த கட்டடங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்ற பின்னர், அது தொடர்பான முடிவுகளை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இந்நிலையில், இன்று (நேற்று) பிற்பகல் நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் அவசர அமைச்சரவை பத்திரமொன்றை பிரதமர் சமர்ப்பிக்கிறார்.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து நிவாரணங்களையும் வழங்குவதற்காக தற்போது உள்ள நிதியை விடுவிக்குமாறு பணித்துள்ளேன். மேலும், தேவையான அனைத்து நிதி ஒதுக்கீடுகளுக்கும் உரிய மதிப்பீடுகளை விரைவாகத் தயாரிக்க மாவட்ட செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்த நிலைமையின் போது அன்றைய அரசாங்கம் 170 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. கடந்த ஆண்டு, 13 மாவட்டங்களில் அனர்த்த நிலைமை ஏற்பட்டது.

இம்முறை சில மாகாணங்களில் பாரிய அளவில் சேதம் ஏற்படவில்லை. எவ்வாறாயினும், இந்த வருடமும் அடுத்த வருடமும் அனர்த்த சேதங்களை புனரமைக்கத் தேவையான அனைத்து நிதியையும் வழங்க எதிர்பார்த்துள்ளோம்." – என்றார்.







# நல்லிணக்க பொறிமுறை அதிகாரிகள் புத்தளம் மாவட்டத்திற்கு நேரடி விஜயம்

1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக மக்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயவும் சாத்தியமான தீர்வுகள் குறித்து கலந்துரையாடவும் என உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் கடந்த மே 13 முதல் 15 ஆம் திகதி வரை புத்தளம் மாவட்டத்தில் பல கூட்டங்களை நடத்தியது.

மூன்று நாள்கள் நடைபெற்ற இந்த கூட்டங்களின் போது, உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் புத்தளம் மக்களின் முக்கிய பிரச்சினைகளையும் தேவைகளையும் அடையாளம் காண்பதற்காக பல்வேறு பங்குதாரர்களுடன் 09 அமர்வுகள் நடத்தப்பட்டன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. .

நிர்வாக ரீதியான சவால்கள் மற்றும் வள ஒதுக்கீடு தொடர்பில் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி ஹேரத் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் டபிள்யூ.எம்.எஸ். ஜி கருணாரத்ன ஆகியோரைச் சந்தித்து இந்தக் குழு கலந்துரையாடியது.

மேலும், பிராந்திய செய்தியாளர்களுக்கான ஊடக சந்திப்பு நடத்தப்பட்டதுடன், இடைக்கால செயலகத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் பற்றிய தெளிவு வழங்கப்பட்டது. வனாதவில்லு மற்றும் கல்பிட்டி கிராம மக்களுடனான சந்திப்புகள் அந்தந்த பிரதேச செயலகங்களில் நடைபெற்றன. இதன் போது உள்ளூர் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதே சமயம் சிரம்பியடியில் உள்ள இலங்கை ஆபிரிக்க சமூகத்துடனான கலந்துரையாடலின் போது அவர்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்கள் பற்றி ஆராயப்பட்டது.

உத்தேச சட்டத்திருத்தம் குறித்து ஆராயவும் அவர்களின் நிலைப்பாட்டை அறிவதற்காகவும் பிரதேச செயலகத்தில் புத்தளம் மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விமானப்படை அதிகாரிகளுடன் இக்குழுவினர் மே 14 ஆம் திகதி சந்திப்பொன்றை நடத்தினர்.

முன்னாள் இராணுவ அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஜனசபை உறுப்பினர்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் உறுப்பினர்களுடன் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் சமூக மற்றும் நிர்வாக விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இது தவிர பிரதேச செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது புத்தளம் மாவட்டத்தின் நிர்வாகம் மற்றும் வள முகாமைத்துவ பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இறுதி நாளான மே 15-ஆம் திகதி முகத்துவாரம் மீனவ கிராமத்தில் உள்ள கிராம மக்களிடம் அவர்களுக்கே தனித்துவமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து குழுவினர் ஆலோசனை நடத்தினர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் போதிய வளப்பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்கள் மற்றும் வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத் தரம் பாதிக்கப்படுவதாக இந்தக் கலந்துரையாடல்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், மண் அரிப்பைத் தடுப்பது மற்றும் வனவளத்துறை மூலம் காணி ஒதுக்கீடு செய்வது குறித்தும் கவனம் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் புத்தளத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மாவட்டத்தில் உள்ள சில முக்கிய சவால்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. மக்களுக்கு தமது பிரச்சினைகளை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதையும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிகளுக்கு இங்கு சேகரிக்கப்படும் தகவல்கள் முக்கிய உதவியாக இருக்கும் என அதன் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.









### இரத்தினபுரியில் தமிழ் எம்.பியைப் பெறுவது எமது உரிமை

# தமிழ் வாக்குகளைச் சிதறடிக்க வருவோர் தலைகளில் இடிவிழும்

## மாவட்ட மாநாட்டில் மனோ எம்.பி. முழக்கம்



"இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் எம்.பியைப் பெறுவது எமது உரிமை. தமிழ் வாக்குகளைச் சிதறடிக்க வருவோர் தலைகளில் இடிவிழும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட கட்டமைப்பு மாநாடு, மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் ஏற்பாட்டில், இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ஷ டி சில்வா, இரத்தினபுரி மாவட்ட எம்.பிக்களான தலதா அத்துகோரள, ஹேஷா விதாரண, வருண கமகே, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் எம். வேலுகுமார் எம்.பி., மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் இராஜாராம் ஆகியோர் உட்பட கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களும், விசேட அழைப்பாளர்கள் மற்றும் அங்கத்தவர்களும் கலந்துகொண்டார்கள். இதில் தலைமை உரையாற்றும்போதே மனோ எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து கை தவறிப் போகும் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இம்முறை பெற்றே தீருவோம். ஒன்றேகால் இலட்சம் தமிழர் வாழும், எழுபத்தி ஐயாயிரம் தமிழ் வாக்காளர் வாழும் இரத்தினபுரியில் எம்.பி. பதவியைப் பெறுவது எமது உரிமை. அது ஒரு சலுகை அல்ல. ஆகவே, அடுத்த முறை எங்கள் வேட்பாளர் சந்திரகுமார் இரத்தினபுரி மாவட்டத்தின் எம்.பியாக வெற்றி பெற்று வருவார்.

இந்த மழை, வெள்ளத்துக்கு இடையிலும், இங்கே பெருந்தொகையில் கூடி இருக்கும் நீங்கள் இம்மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளில், அனைத்து தோட்டப் பிரிவுகளில், அனைத்து பிரிவுகளில் அமைந்துள்ள எங்கள் அமைப்பாளர்களின் தலைமையிலான கட்சிவலைப்பின்னல் செயற்குழு உறுப்பினர்கள். உங்கள் பெயர்ப்பட்டியல் என்னிடம் இருக்கின்றது. இது ஜனநாயக மக்கள் முன்னணியின் மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடு. இதுதான் எங்கள் அறிவார்ந்த அரசியல் பாணி.

இது மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடு. வண்டிகளில் ஆளைக்கூட்டி வந்து தலைகளை எண்ணிக் காட்டும் நிகழ்வு அல்ல. கடந்த ஞாயிறன்று தம்பி பரணிதரன் கேகாலை மாவட்டத்தில் நடத்திய அம்மாவட்ட கட்டமைப்பு மாநாடு போன்று, இன்று தம்பி சந்திரகுமார் இங்கே இரத்தினபுரி மாவட்டத்தில் நடத்துகின்றார்.

நான் சப்ரகமுவ மாகாணத்தில் பிறந்தேன். சப்ரகமுவ மாகாணத்துக்குப் பக்கத்துக்கு கேகாலை மாவட்டத்தில் என் தாயின் ஊர் எட்டியாந்தோட்டை களனி கங்கை நதி தீரத்தில் பிறந்தேன். பின்னர் என் தந்தையின் ஊர் கண்டிக்குப் போய் மாகாவலி கங்கை தீரத்தில் வளர்ந்தேன். பின்னர் இரண்டு நதிகளும் சேரும் கடலை கொண்ட கொழும்பைக் கைப்பற்றினேன். உங்கள் சார்பாகவும் உங்கள் ஆளாகவும், அங்கே நான் தலைநகர எம்.பியாக இருக்கின்றேன் என்பதை மறந்து விட வேண்டாம்.

எனது எம்.பிக்கள் அந்தந்த மாவட்டங்களில் வாழும் மண்ணின் மைந்தர்களாக இருக்க வேண்டும். தமிழ் மொழியுடன் சிங்களமும் பேச வேண்டும். எமது துன்பம், துயரம், கஷ்டம், கண்ணீர் ஆகியவற்றை சிங்கள மொழியில் நாட்டுக்குக் கேட்கும் விதமாக அவர்கள் உரக்கக் கூற வேண்டும். நான் அதைத்தானே செய்கின்றேன். அப்படித்தான் எங்கள் எம்.பிக்கள் இருக்க வேண்டும் என்பது என் கொள்கை. அதைத்தான் வேலுகுமார் செய்கின்றார். எங்கள் மாவட்ட அமைப்பாளர்கள் இரத்தினபுரி சந்திரகுமார், கேகாலை பரணிதரன், கம்பஹா சசிகுமார், கொழும்பு பாலசுரேஷ், களுத்துறை அன்டன் ஜெயசீலன் ஆகியோர் செய்வார்கள்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியாவில், வடக்கில், கிழக்கில் பிரச்சினை இல்லை. ஆனால், நாம் சிறுபான்மையாக வாழும் கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நிலைமை சவால் மிக்கது. இம்மாவட்டங்களில் எமது கடும் முயற்சியால் தமிழ் பிரதிநிதித்துவங்களை எமது இனம் பெறுகின்ற சூழல் கூடி வரும்போது, நாய், நரி, பூனை, யானை, காகம், குருவி, கோழி சின்னங்களைத் தூக்கிக் கொண்டு வந்து தமிழ் வாக்குகளைச் சிதறடிக்க இப்போதே சிலர் திட்டம் போடுகின்றார்கள். துரோகிகளான இவர்கள் தலைகளில் இடிதான் விழ வேண்டும். நாய், நரி, பூனை, யானை, காகம், குருவி வந்தால் விரட்டி விடுங்கள். கோழி கிடைத்தால் பிடித்துப் புரியாணி போடுங்கள்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்கைகளுக்கான மையம், 'பவ்ரல்' ஆகிய தரப்புகள் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் வரப் போகின்றது. அதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடக்கும். அதன்பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்பதுதான் நிதி அமைச்சர் என்ற முறையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதியை வெட்டி, அதை நடக்காமல் பண்ணிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து நிலைப்பாடு.

வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டு, ஒரு பகுதி வாக்குச் சீட்டுக்களும் அச்சிடப்பட்டு விட்ட அந்த உள்ளூராட்சித் தேர்தல் நடக்காமல் காலம் பிந்தி ஏற்கனவே 15 மாதங்கள் கடந்து விட்டன.

அந்தத் தேர்தலை நடக்க விடாமல் தடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய திட்டப்படி – அல்லது அறிவிப்புப்படி – அடுத்த ஆண்டில் அந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக்கும்.

ஆமை வேகத்தில் 'கொடி கட்டிப் பறக்கும்' இலங்கை நீதித்துறையின் நடவடிக்கைப் போக்குப்படி இந்தத் தேர்தலைத் தடுத்தமை மூலம் பாதிக்கப்பட்ட நீதிக்கு – இடம்பெற்ற அநீதிக்கு – அடுத்த ஆண்டில் அந்தத் தேர்தல் நடப்பதற்கு முன்னர் ஏதேனும் முடிவை உயர்நீதிமன்றம் தரும் என நம்புவோம். ஏனெனில் அவ்வளவு வேகமாக நகர்கின்றது இலங்கையின் நீதித்துறை....!

+ + +

ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும் தனது யோசனைத் திட்டம் அரசமைப்பு மற்றும் சட்டங்களுக்கு அமைவானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்க பண்டார நேற்று செய்தியாளர் மாநாடு கூட்டி விளக்கினார்.

அதை ஒட்டி ஒரு விடயத்தை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வென்றார். அவர் 6 ஆண்டு கால பதவிக்கே தேர்வானார். அப்போதைய அரசமைப்பு சட்டத்தின்படி ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஜனாதிபதியின் பதவியை நீடிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்ற ஏற்பாடு இருந்தது. 2015 இல் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசமைப்பு திருத்தம் மூலம் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்களாக குறைக்கப்பட்டது. ஆனால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பதவியை நீடிப்பது தொடர்பான ஷரத்தில் இருந்த 6 ஆண்டுகள் என்ற விடயத்தை மட்டும் – தவறுதலாகவோ அல்லது வேறு காரணத்தாலோ – மாற்றாமல் அப்படியே விட்டு விட்டார்கள்.

ஆகவே இப்போதும் கூட தமக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு இருந்தால், அந்த ஆதரவுடன் தமது பதவி காலத்தை – சர்வஜன வாக்கெடுப்பின்றியே – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இன்னும் ஒரு வருடத்திற்குத் தங்கு தடையின்றி நீடிக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

ஆயினும், அப்படி இருந்தும் என்ன பயன்? நாடாளுமன்றத்தில் சாதாரண அறுதிப் பெரும்பான்மையைப் பெறவே இப்போது அல்லாட வேண்டிய இக்கட்டு நிலையில் இருக்கும் அவருக்கு, மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைத் திரட்டுவது என்பது குதிரைக் கொம்புதான். அல்லது பகல் கனவுதான்....!

## ஜனாதிபதியாக ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பன ஈராண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் தொடர்ந்து இருக்கின்றேன். இந்த விடயம் தொடர்பான எனது அறிவிப்பில் தவறு இருப்பதாக உணரவில்லை." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே தேர்தல்களைப் பிற்போடுவது தொடர்பான அறிவிப்பை விடுத்தேன். அது சரியான – அதேபோல் அறிவிக்க வேண்டியதொரு கருத்தாகும். அப்படியானதொரு கருத்தை வெளியிட்டதால் நான் மனக்கவலையில் இல்லை.

நாட்டுக்குத் தேவையானதொரு விடயத்தையே நான் கூறியுள்ளேன். என்னை விமர்சிப்பவர்கள் உத்தமர்கள் அல்லர். அவர்கள் சுயலாபவாதிகள், அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள்.

அதேவேளை, தமிழ்பேசும் கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியில் தொடர வேண்டும் என்பதையே விரும்புகின்றன." – என்றார்.

## இன்று மூடப்பட்டிருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம, கடுவெல கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கும், கம்பஹா மாவட்டத்தில் கம்பஹா, களனி கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் இன்று வழமை போல இயங்கும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## வெள்ளத்தில் அடித்துச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

23 மற்றும் 53 வயதுடைய நபர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக தவலம பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது இவர்கள் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆளும் கட்சிக் கூட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கும் இடையில் காரசாரமான வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றது.

எனினும், பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் சமரவிக்கிரம தலையிட்டு இருவரையும் சமரசம் செய்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


எவ்வாறாயினும், கூட்டத்தின் முடிவில் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கும் குணதிலக ராஜபக்ஷவுக்கும் இடையில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது.

மஹிந்தானந்த அளுத்கமகே அவரைத் தள்ள முற்பட்டபோது குணதிலக ராஜபக்ஷ மாடிப்படியில் வீழ்ந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், குணதிலக ராஜபக்ஷ எம்.பியுடன் தான் வாக்குவாதத்தில் மாத்திரம் ஈடுபட்டார் எனவும், ஆனால் அவரைத் தள்ள முயற்சிக்கவில்லை எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி. தெரிவித்துள்ளார்.





# தொழிலாளர் சம்பள அதிகரிப்பு வர்த்தமானிக்கு தடையுத்தரவு பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் மறுப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான வர்த்தமானியை அமுல்படுத்தப்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக் காதிருக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிமன் றம் இதனைத் தீர்மானித்துள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர்களான சோபித்த ராஜ கருணா, தம்மிக்க கனேபொல ஆகி யோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கடந்த 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவற்றதாக்கி, எழுத்தாணை கட்டளை பிறப்பிக்குமாறு கோரி 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தன.

பெருந்தோட்ட கம்பனிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமெஷ் டி சில்வா மற்றும் தொழில் அமைச்சர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா ஆகியோர் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

அரசாங்கம் எடுத்துள்ள தீர்மா னத்தை செயற்படுத்தினால் தற்போது நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் முழுமையாக செயலிழக்கும் நிலை உருவாகும் என மனுத்தாரர்கள் நீதி மன்றில் சுட்டிக்காட்டினர்.

பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடாமல் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளமையால் அதனை செல்லுபடியற்றதாக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழில் ஆணையாளர் நாயகம் எச்.கே.ஏ.ஜயசுந்தர, தொழில் அமைச்சின் செயலாளர் எச்.ஜி.டபிள்யூ. குணவர்தன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 52 பேர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட் டுள்ளனர்.







# இராகலையில் மக்கள் நேற்று வெடி கொளுத்தி ஆராவாரம்

(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்க உத்தரவிடும் அரசாங்கம் வர்த்த மானி அறிவித்தலுக்கு எதிராகத் தடை உத்தரவு வழங்க முடியாதென கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தெரிவித்தமையை அடுத்து இராகலை நகரில் மக்கள் நேற்று வெடி வெடித்து மகிழ்ச்சி ஆராவாரம் செய்தனர்.

உழைத்து வாழும் தோட்ட தொழிலா ளர்களுக்கு நீதிமன்றம் நீதி வழங் கியுள்ளது என மகிழ்சி தெரிவித்தும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு நன்றி தெரிவித்தும் மக்கள் இராகலை நகரில் வெடி வெடித்து மகிழ்ச்சி ஆரா வாரம் செய்தனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் பேரினவாத வெறி

இலங்கைத் தீவில் சற்று ஓய்ந்திருக்கும் சிங்கள - பௌத்த பேரினவாத இனவெறிப் போக்கு மீண்டும் தலையெடுக்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

வழக்கமாக தேசிய தேர்தல்கள் வரும் போது இனவெறிப் பிரசாரமும் வெளிப்படுவதும் தீவிரம் பெறுவதும் சாதாரண போக்குதான்.

பெரும்பான்மை இனத்தவர்களான பௌத்த - சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கிளப்பி, அதன் பெயரில் வாக்குகளைச் சுருட்டுவது சுலபமான அரசியல் தந்திரம் என்பதனால், இந்தக் குறுக்கு வழிமுறையைப் பின்பற்ற அரசியல் தலைமைகள், கட்சிகள் பின்னிற்பதில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், அதைத் தொடர்ந்து பொதுத்தேர்தலிலும், பேரினவாத வெறியைக் கிளப்பி, அந்த உணர்ச்சி வேகத்தில் பெருவெற்றியைச் சுருட்டிக் கொண்ட கோட்டாபய ராஜபக்ஷவும், அவரது அரசும், அதன் பின்னர் தவறான ஆளுகை மூலம் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக அதிகாரத்திலிருந்து ஓடித் தப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதுவரை மோசமாகக் கோலோச்சிய பேரினவாத வெறிப்போக்கு, அதன் பின்னர் சற்று அடங்கியதாயினும் முற்றாக அது செயலிழந்து விடவில்லை.

இப்போது மீண்டும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்று ஜனநாயக நடவடிக்கைகள் களை கட்டுவதால், இலங்கையின் ஜனநாயகத்துடன் பிரிக்க முடியாததாகப் பிணைக்கப்பட்டுக் கிடக்கும் பேரினவாதமும் மெல்லத் தலை தூக்கப் பார்க்கின்றது என்பது வெளிப்படையானது.

அதிர்ஷ்டவசமாக இதுவரை இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடியவர்கள் என்று கருதப்படும் பிரதான வேட்பாளர்கள் மூவருமே - ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகிய மூவருமே - இன்னும் பேரினவாத ஒலிபெருக்கிகளைக் கையில் தூக்கவில்லை. அந்த விடயத்தை அவர்கள் அமுக்கியே வாசிக்கின்றனர்.

இதனால் அந்தத் தளத்தில் ஒரு பெரிய வெற்றிடம் இருப்பதைப் புரிந்து கொண்டு, அதற்கு ஊடாக ஒரு வேட்பாளரை இறக்குவதற்கு வழமையாகப் பேரினவாதத்தையே தமது ஒரே கொள்கைப் போக்காக கடைப்பிடித்திருக்கும் தரப்புக்கள் தீர்மானித்துச் செயற்படுகின்றன.

விமல் வீரவன்ஸ, உதய கமன்பில்ல ஆகியோரோடு கூட்டமைத்திருக்கும் ஊடக முதலாளி டிலிட் ஜயவீரவின் மௌபிம மக்கள் கட்சியும் சேர்ந்து இந்தப் பேரினவாத நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் தளத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி தேர்தலில் குதிரையோட்ட முயலாம் என எச்சரிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபயவின் விசேட பிரதிநிதியாக கிழக்கு ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்பட்டு, அந்தப் பொறுப்புகளில் பேரினவாதத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தி நின்ற அனுராதா யஹம்பத் அம்மையார் இந்தக் கூட்டின் வேட்பாளராகக் களமிறக்கப்படுவார் என்று கூறப்படுகின்றது.

அதுதான் உண்மை நிலைவரம் என்றால், நிச்சயம் வரும் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் பேரினவாத வெறிப் போக்கு திரும்பவும் கொடிகட்டிப் பறக்கும் என்று நம்ப முடியும்.

பௌத்த - சிங்கள தீவிரப் போக்குடைய தென்னிலங்கை பௌத்த குருமார் மற்றும் பேரினவாதிகள் இந்த தரப்பின் பின்னால் இலகுவில் அணி திரளுவர்.

போதாக்குறைக்கு வரும் செப்டம்பரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக ஏற்கனவே 2002 ஒக்டோபரில் நிறைவேற்றப்பட்ட 51 / 01 இலக்கத் தீர்மானம் காலாவதியாகின்றமையால், அது தொடர்பான விவாதங்களும் புதிய தீர்மானத்திற்கான பிரேரணைகளும் அங்கு சூடு பிடிக்க அதன் பிரதிபலிப்பாக நாட்டில் - குறிப்பாக தென்னிலங்கையில் - பேரினவாதம் பீறிட்டுக்கனன்று எழுந்து விஸ்வரூபம் எடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

அதன் நேரடித் தாக்கம், அச்சமயத்தை ஒட்டி நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திலும் வாக்களிப்பிலும் கூட பிரதிபலிக்கும் என்பதும் எதிர்பார்க்கப்படுவதே.

ஏற்கனவே தமிழர் தேசத்தில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல், தேர்தலை பகிஷ்கரித்தல் போன்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றமையையும் தெற்கில் பௌத்த - சிங்கள பேரினவாதத் தீயைத் தூண்டி பெரிதுபடுத்தி விடும் ஆபத்தும் உண்டு.





# கருத்துக் கணிப்புகளைத் தேர்தல் முடிவுகள் பொய்யாக்கும் என்கிறார் சோனியா காந்தி

"கருத்துக் கணிப்புகளைத் தேர்தல் முடிவுகள் பொய்யாக்கும்" என காங்கிரஸின் மூத்த தலைவர் சோனியா காந்தி கருத்து தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சரான கலைஞர் கருணாநிதியின் 101 ஆவது பிறந்த தினமான நேற்று டில்லியில் உள்ள தி.மு.க அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சோனியா காந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,


"பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் பா.ஜ.கவுக்கு சாதகமாகவே அமைந்துள்ளன. மத்தியில் ஆட்சியமைக்க 272 தொகுதிகளில் வென்றாலே போதும் என்ற நிலையில், பா.ஜ.க கூட்டணி 350 முதல் 380 தொகுதிகள் வரை வெல்லும் என்று சில கருத்துக்கணிப்புகள் கூறியுள்ளன.

பொறுத்திருந்து பாருங்கள். கருத்துக் கணிப்புகளை தேர்தல் முடிவுகள் பொய்யாக்கும். நிச்சயம் தேர்தல் முடிவுகள் இந்தியா கூட்டணிக்கு சாதகமாக அமையும்." – என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 2004 ஆம் ஆண்டு பெரும்பாலான கருத்துக் கணிப்புகளில் வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி ஆட்சியமைக்கும் என்றே கூறப்பட்டிருந்தன.

ஆனால், கருத்துக் கணிப்புகளுக்கு மாறாக காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வட மாநிலங்களில் வெப்ப அலை; 33 தேர்தல் பணியாளர்கள் உயிரிழப்பு




இந்திய பொதுத் தேர்தல் முடிவடைந்த நிலையில், தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த 33 தேர்தல் அலுவலர்கள் கடும் வெப்பம் காரணமாக வாக்களிப்பு நிலையங்களிலேயே உயிரிழந்துள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலத்தில் இருந்து இறப்புகள் பதிவாகியுள்ளன.

தற்போது இந்தியாவின் வடக்கு மற்றும் மத்திய மாநிலங்கள் கடும் வெப்பத்தில் தத்தளித்து வருகின்றன. சில மாநிலங்கள் மற்றும் நகரங்களில் வெப்பநிலை 49 டிகிரி செல்சியஸைத் தாண்டியுள்ளது."

தேர்தல் நடவடிக்கைகளின் வெற்றிக்காக தங்களை அர்ப்பணித்த 33 அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர் என உத்தரபிரதேச மாநில தலைமை தேர்தல் ஆணையராக உள்ள நவ்தீப் ரின்வா ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் உயிரிழந்த அதிகாரி ஒருவருக்கு இந்திய அரசு 1.5 மில்லியன் இந்திய ரூபாய் இழப்பீடு வழங்க முடிவு செய்துள்ளதாக நவ்தீப் ரின்வா ஊடகங்கள் முன் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவை பாதித்துள்ள கடும் வெப்பமான காலநிலையால் உயிரிழந்த இந்தியர்களின் எண்ணிக்கை 58 என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் இருந்து இறப்புகள் பதிவாகியுள்ளன.

7 கட்டங்களின் கீழ் 44 நாள்கள் நடைபெற்ற இந்திய பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் முடிவடைந்தது. ஒரு மில்லியன் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு 15 மில்லியன் தேர்தல் அலுவலர்கள் தங்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மெக்சிகோவில் 200 ஆண்டுகால வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதியானார் கிளாடியா






மெக்சிகோவில், முதல் பெண் ஜனாதிபதியாக கிளாடியா ஷீன்பாம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனை அதிகாரபூர்வ விரைவான எண்ணிக்கை உறுதி செய்துள்ளதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

மெக்சிகோவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி, 128 செனட் உறுப்பினர்கள் மற்றும் 500 கீழவை உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

இதில் இடதுசாரி கட்சியான மொரேனா கட்சி சார்பில், 61 வயதான கிளாடியா ஷீன்பாம் போட்டியிட்டார்.

இவர், இந்த தேர்தலில் 58.3 முதல் 60.7 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார் என அந்த நாட்டின் தேசிய தேர்தல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், கிளாடியா ஷீன்பாம், டிசம்பர் மாதம் ஜனாதிபதியாக பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோவில் நகர மேயாராக பணியாற்றிய கிளாடியா ஷீன்பாம், காலநிலை விஞ்ஞானியாகவும், மெக்சிகோ தேச அரசியலில் அனுபவம் கொண்டவராகவும் விளங்குகின்றார்.

மெக்சிகோவில், 200 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மெக்ஸிகோ ஜனாதிபதிக்கு உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கிளாடியா ஷீன்பாம் தனது வெற்றி உரையில், “நான் மெக்சிகோ நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி ஆகிறேன். இது எனது வெற்றி மட்டுமல்ல. நம் அனைவருடைய வெற்றியாகும். தாய்மார்களுக்கான வெற்றி. இதன் மூலம் மெக்சிகோ ஜனநாயக நாடு என்பதை நாம் நிரூபித்துள்ளோம்” என தெரிவித்துள்ளார்.




# ஐஸ்லாந்தின் புதிய ஜனாதிபதியாக ஹல்லா தோமஸ் டோட்டிர் தெரிவு

ஐஸ்லாந்தின் புதிய ஜனாதிபதியாக ஹல்லா தோமஸ் டோட்டிர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தொழிலதிபரான ஹல்லா தோமஸ் டோட்டிர் மற்றும் முன்னாள் பிரதமர் கேத்ரின் ஜாகோப்ஸ்டோட்டிர் ஆகியோருக்கு இடையில் பலத்த போட்டி நிலவியது.

இந்த நிலையில் 34.6 சதவீத வாக்குகளைப் பெற்று, அந்த நாட்டின் இரண்டாவது பெண் ஜனாதிபதியாக 55 வயதான ஹல்லா தோமஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட , 48 வயதான கட்றின் ஜோகோப்ஸ்டோட்டிர் 25.5 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.

கடந்த 1980 ஆம் ஆண்டு ”விக்டிஸ் பின்னபோகாடோட்டிர்” என்பவர் ஐஸ்லாந்தின் முதல் பெண் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனி தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபா சகல பெருந்தோட்ட நிறுவனங்களும் வழங்கியாக வேண்டும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை அனைத்து பெருந்தோட்ட நிறுவனங்களும் வழங்கியாக வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

சம்பள உயர்வு விடயத்தில் நீதிமன்ற அறிவிப்பு தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாய் சம்பள உயர்வு வழங்க வேண்டுமென அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.



வர்த்தமானிக்கு இடைக்கால தடை உத்தரவை வழங்க வேண்டும் என அனைத்து பெருந்தோட்ட நிறுவனங்களும் நீதி மன்றம் சென்று வழக்குத் தொடர்ந்திருந்தன.

வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு வழங்க முடியாதென நீதி மன்றம் நீதி வழங்கியுள்ளது.

அப்படியென்றால் பெருந்தோட்ட நிறுவனங்கள் அனைத்தும் தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாவை கட்டாயம் வழங்கியாக வேண்டும்.


இந்த விடயத்தை மக்கள் மத்தியில் கொண்டு சேருங்கள். மக்களுக்கும் தெரியட்டும் - அரசாங்கம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஊடாக மக்களுக்கு தீர்வை பெற்று கொடுத்துள்ளோம் என்று.

இதுபோன்ற மலையக மக்கள் மற்றுமின்றி ஏனைய மக்களுக்கும் இவ்விடயம் தெரிந்ததாக வேண்டும்.

குறிப்பாக இ.தொ. கா தலைவர் செந்தில் தொண்டமான், காங்கிரஸின் தவிசாளர் உள்ளிட்ட அனைவரின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துகொள்கிறேன். - என்றார்.








# மருத்துவர் என நடித்து மோசடிகளில் ஈடுபட்ட சந்தேக நபர் யாழில் கைது!

போலி ஆவணங்களை உருவாக்கிக் காண்பித்து மருத்துவர் என அறிமுகப் படுத்தி கனடாவில் உள்ள ஒருவரிடம் ஒரு கோடியே 42 லட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப் பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப் பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம், சுன்னாகத்தைச் சேர்ந்தவர் என்றும், 29 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. அதிசொகுசு கார் ஒன்றும், 15 பவுண் நகைகளும், 5 லட்சம் ரூபா பணமும், 5 கைபேசிகளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவர் தான் ஒரு மருத்துவர் என்பதற்குரிய போலி ஆவணங்களையும், அடையாள அட்டையையும் உருவாக்கியுள்ளார். அவற்றைக் கொண்டே அவர் மோசடிகளை மேற்கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கனடாவில் உள்ள ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ள இவர், மருத்துவ மேற்படிப்புக்காக புலமைப்பரிசில் கிடைத்துள்ளது என்றும், அதனால் வெளிநாடு செல்லவுள்ளார் என்றும் கதைவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் காணி ஒன்று தனக்கு உள்ளது என்று தெரிவித்து அதற்குரிய ஆவணங்களையும் அனுப்பியதுடன், அதை ஒரு கோடியே 42 லட்சத்துக்கு விலைபேசியிருக்கின்றார். அதை நம்பி கனடாவில் இருந்து உண்டியல் மூலமும், வங்கிக் கணக்கு ஊடாகவும் ஒரு கோடியே 42 லட்சம் ரூபா கைமாறியுள்ளது.

பின்னர் இவர் அனுப்பிய காணி ஆவணங்கள் போலியானவை என்பதை அறிந்துகொண்ட கனடா தரப்பு இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தது.

அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், சந்தேகநபர் இன்று யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடமாடுகின்றமையை அறிந்துகொண்ட யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் சந்தேநபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான அதி சொகுசு காருடன் கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடம் இருந்து கைச்செலவுக்காக வைத்திருந்த ஐந்து லட்சம் ரூபா பணமும், அவர் அணிய வைத்திருந்த 15 பவுண் நகைகளும், 5 கைபேசிகளும், வங்கி அட்டைகளும் கைப் பற்றப்பட்டுள்ளன.

இவர் தன்னை மருத்துவர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சேவை மேற்கொள்கின்றேன் என்று தெரிவித்து வெளிநாடுகளில் உள்ள பலரிடம் பணம் பெற்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

சந்தேகநபரால் பலகோடி ரூபா மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்றும், விசாரணைகளில் மேலதிக விடயங்கள் வெளிவரலாம் என்றும் நம்பப்படுகின்றது.



# ரயில் பாதையில் பஸ் ஓடிய சாரதிக்கு விளக்கமறியலில்

ரயில் பாதையில் பஸ்ஸை செலுத்திய சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னெச்சரிக்கை எதுவுமின்றி ரயில் பாதையில் பஸ்ஸை செலுத்திய சாரதி எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், மேற்படி சாரதி நேற்று அவிசாவளை நீதவான் நீதிமன்றில்முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# கெஹெலிய உள்ளிட்ட 8 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது!

மருந்து மோசடி சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 சந்தேகநபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கின் நான்காவது சந்தேகநபரான மருந்து வழங்கல் பிரிவின் முன்னாள் கணக்காய்வாளர் நெராங் தனஞ்ஜயவை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# பாடசாலைகளுக்கு அருகில் அபாய நிலையில் 40 மரங்கள்

கொழும்பின் சில முக்கிய பாட சாலைகளுக்கு அருகிலுள்ள 40 மரங்கள் அபாய நிலையில் இருக்கின்றன என கொழும்பு மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மாவட்டங்களுக்கிடையிலான பாடசாலை சிறுவர் போக்குவரத்து சேவைச் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக கடந்த சில நாள்களாக பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள் ளன எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த நிலையில், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பில் கொழும்பு மாநகர சபை அவதானம் செலுத்த வேண்டுமென அந்தச் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.



# விஜயதாச ராஜபக்ஷவிற்கு விதிக்கப்பட்ட தடை நீடிப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்குத் தடை விதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், மேற்படி மனு மீதான விசாரணையை கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சமரி வீரசூரியவுக்கு மாற்றுவதாக நீதிபதி சந்துன் விதான நேற்று அறிவித்துள்ளார்.




# வெள்ளம் நிலைமை தொடர்பில் சிவப்பு நிற எச்சரிக்கை விடுப்பு

நிலவும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து சில ஆறுகளுக்கு வெள்ளம் தொடர்பில் சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி களு கங்கை, நில்வளா கங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றுக்கே வெள்ளம் குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், களனி கங்கை, கிங் கங்கை மற்றும் மஹா ஓயா ஆகிய வற்றின் நீர்மட்டங்களும் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையினைத் தொடர்ந்து ஆறுகளை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளம் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் அந்தத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



# சீமெந்தின் விலை குறைக்கப்பட்டது

கடந்த ஜுன் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் சீமெந்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

சீமெந்து நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 50 கிலோகிராம் சீமெந்து மூடையொன்றின் விலை 150 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சீமெந்து மூடை ஒன்றின் புதிய விலை 2,250 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.





# கொச்சிக்கடை அந்தோனியார் கொடியேற்ற வைபவம் நேற்று

கொழும்பு-13 கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய கொடியேற்ற வைபவம் நேற்று திங்கட்கிழமை காலை அருட்தந்தை பற்றிக் பெரேய்ரா தலைமையில் நடைபெற்றது. கொடியேற்ற பூஜையை நடாத்தி வைத்து கொடியேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம்.















# இந்த அரசின் ஆயுள்காலம் இன்னும் 3 மாதங்களே; அடாவடித்தனம் செய்து வாக்குகள் பெற மாட்டேன்!

## கூரைத் தகடுகள் வழங்கும் நிகழ்வில் திகா எம்.பி. தெரிவிப்பு

**(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)**

இப்போதுள்ள அரசாங்கத்தின் ஆயுள்காலம் இன்னும் மூன்று மாத்திரமே. நான் வாயால் வடை சுட்டு மக்களை ஏமாற்றாமல் எனக்குக் கிடைத்த அமைச்சை வைத்து நிறைவான சேவைகளை செய்து காட்டியுள்ளேன். எனவே, அடாவடித்தனம் செய்தும், பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்தும் மக்களை ஏமாற்ற வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. சஜித் தலைமையிலான நல்லாட்சியில் மலையகத்தில் மீண்டும் அபிவிருத்திப் பணிகளைத் தொடர்வேன் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் சாமிமலை மாநிலு தோட்டத்தில் இடம்பெற்ற கூரைத் தகரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

சங்கத்தின் தேசிய அமைப்பாளர் ஜி. நகுலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதித் தலைவர் எம். உதயகுமார் எம்.பி., பொதுச் செயலாளர் எஸ்.பிலிப், நிதிச் செயலாளர் சோ. ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். அவர் மேலும் பேசுகையில் –

2013 ஆம் ஆண்டு என்னால் பெற்றுக் கொடுக்கப்பட்ட சுமார் 10 இலட்ச ரூபா பெறுமதி வாய்ந்த கூரைத் தகடுகளை தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வழங்காமல் முடங்கிக் கிடந்ததை காலநிலை சீரற்றுள்ள காலத்தில் மக்களுக்கு கையளிக்க ஏற்பாடு செய்துள்ளேன். நான் சில அரசியல்வாதிகளைப் போல வாயால் வடை சுட்டவனல்லன். இனிமேலும் சுடப் போபவனுமல்லன். தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக மக்களை ஏமாற்றி நான நாடகம் ஆடியதும் கிடையாது. கவர்ச்சிக்காகச் சண்டித்தனம் காட்டி, அரசாங்க வளங்களைப் பயனபடுத்திக் கொண்டு அடாவடித்தனம் செய்து கூத்தடித்ததும் கிடையாது.

நல்லாட்சி அரசாங்கத்தில் தலா ஏழு பேர்ச் காணியில் தனி வீடுகளை அமைத்துக் கொடுத்து காணி உறுதிப் பத்திரங்களை வழங்கியபோது, அந்த வீடுகளை "குருவிக் கூடுகள்" என்று விமர்சித்து ஏளனம் செய்தார்கள். இன்றைய அரசாங்கத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தலா 20 பேர்ச் காணியில் "சிலப்" போட்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள் எனவும், பல்கலைக் கழகம் அமைக்கப் போகிறார்கள் எனவும் கொடுத்த வாக்குறுதிகளில் எதுவுமே மக்களுக்குக் கிடைக்கவில்லை. இந்திய அரசாங் கத்தின் வீடமைப்புத் திட்டத்துக்கு என்ன நேர்ந்தது என்றே தெரியவில்லை.

தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைப்பதை யாரும் எதிர்க்கவில்லை. கூட்டிக் கொடுக்கப் போகிறார்களெனக் கூறி ஏமாற்றுவதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இன்னும் மூன்று மாத காலத்தில் அரசாங்கத்தின் ஆயுள் காலம் முடிந்து விடும்போது மலையக மக்களை ஏமாற்றி நாடகம் ஆடுபவர்களின் ஆட்டமும் அடங்கி விடும் முகத் திரையும் விலகி விடும். நான் கூறுகின்ற தொப்பி யாருக்கு பொருத்தமாக இருக்கின்றதோ அவர்கள் அணிந்து கொள்ளலாம்.

அடுத்த ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வரும்போது, அபிவிருத்தித் திட்டங்களுடன் தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக நிச்சயம் மாறுவார்கள் – நான் அமைச்சராக வரும்போது. என்னுடைய கட்சிக்கு வந்தால் தான் வீடுகள் கிடைக்கும் என்ற நிலைமை இருக்காது. நான் இதுவரை செய்துள்ள சேவைகளை சீர்தூக்கிப் பார்த்து மக்கள் வாக்களிப்பார்கள். – என்றார்.



# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக ஜனாதிபதி மேற்பார்வை விஜயம்

களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும், மழை நீர் வழிந்தோடுவதைத் தடுக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணங்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் நிலம் நிரப்பப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கும் முல்லேரியா மற்றும் ஐ.டி.எச். வைத்தியசாலைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கொலன்னாவ, களனி, அம்பத்தளை ஆகிய பிரதேசங்களுக்கு மேற்பார்வை விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, கொலன்னாவை சேதாவத்த வெஹெரகொட ரஜமஹா விகாரையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள அம்பத்தளை, கல்வான புராண ரஜமஹா விகாரை, சேதவத்த வெஹெரகொட புராண ரஜமஹா விகாரை, கொலன்னாவ டெரன்ஸ் எஸ். சில்வா வித்தியாலயம் மற்றும் வெல்லம்பிட்டி காமினி வித்தியாலய பாதுகாப்பு நிலையம் என்பவற்றுக்குச் சென்ற ஜனாதிபதி, மக்களின் நலன்களைக் கேட்டறிந்தமையோடு, அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றைத் தொடர்ச்சியாகப் பூர்த்தி செய்யும் பணிகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

கொலன்னாவையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று இரவு முதல் உணவு வழங்குமாறு கொலன்னாவை பிரதேச செயலாளருக்கு அறிவித்த ஜனாதிபதி, அந்த மக்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து நிரந்தர வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார். குழாய்களைப் பயன்படுத்தி வெள்ளம் வேகமாக வடிந்து செல்ல வழிசெய்து, மக்களை துரிதமாக மீள்குடியேற்று

தொடர்ச்சி▼













# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக ஜனாதிபதி மேற்பார்வை விஜயம்

தொடர்ச்சி▲

மாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

அனர்த்த சூழ்நிலையில் இருந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ள மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அங்கு சுட்டிக்காட்டினார்.

கொலன்னாவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அவர், பிரஜைகள் பொலிஸாரின் பங்களிப்புடன் நடமாடும் ரோந்து சேவைகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்க வேண்டும் என்று இராணுவத்தினருக்கு பணிப்புரை வழங்கிய சாகல ரத்நாயக்க, மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

மேலும், அனர்த்த நிலை குறையும் வரை மக்களுக்கு நிவாரணம் வழங்க முப்படையினர் ஆளணி பலத்துடன் தற்காலிக மத்திய நிலையமொன்றை



அமைக்குமாறு அறிவுறுத்திய அவர், வெள்ளம் குறைந்த பிறகு ஏற்படக் கூடிய டெங்கு, எலிக்காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த அனைத்து வீடுகளையும் அரசாங்கத்தின் உதவியுடன் இராணுவத்தினரின் பங்களிப்புடன் நிர்மாணிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சட்டத்தரணி பிரேமநாத்.சி.தொலாவத்த, எஸ்.எம்.மரிக்கார், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியுடனான மேற்பார்வை விஜயத்தில் இணைந்துகொண்டனர்.












# வடக்கு மாகாண அரச சாரதிகள் நேற்றுத் தொடக்கம் போராட்டம்

வடக்கு மாகாண அரச சாரதிகள் தமக்கான இடமாற்றம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முதல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை கூடிய அரச சாரதிகள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஐந்து வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளின் இடமாற்றம் தொடர்பில் கடந்த வருடம் பிரதிப் பிரதம செயலாளரினால் (நிர்வாகம்) விண்ணப்பங்கள் கோரப்பட்டு இடமாற்ற பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஆளுநரின் கோரிக்கைக்கு இணங்க இடமாற்றம் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்த அரச சாரதிகள் கடந்த பெப்ரவரி மாதம் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டிருந்தனர். போராட்ட ஏற்பாட்டினைத் தொடர்ந்து ஜூன் முதலாம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்ட இடமாற்றம் அமுல்படுத்தப்படுமென எழுத்து மூலமான உறுதி மொழியைப் பிரதிப் பிரதம செயலாளர்(நிர்வாகம்) வழங்கியிருந்தார்.

அந்தத் திகதியில் இடமாற்றம் நடைமுறைக்கு வராதநிலையில் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தொடர்ச்சியாக 7 ஆம் திகதி வரை தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 04.06.2024




இன்றைய நாள் மிகவும் பரபரப்பாக இருக்கும். ஆனால் நீங்கள் ரிலாக்ஸ்டாக இருங்கள்.

இன்று நீங்கள் ஓய்வெடுக்க இயலாத அளவிற்கு வேலை இருக்கும். அதன் காரணமாக நீங்கள் சில அசௌகரியங்களை உணர் வீர்கள்.

குடும்பத்தில் சில குழப்பங்கள் காணப்படும். நீங்கள் அனுசரித்துப் போக வேண்டியது அவசியம்.

அதிகரிக்கும் செலவினங்களினால் கவலைகள் உண்டாகும். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தவும்.

ஆரோக்கியம் சற்று கவலை அளிப்பதாக இருக்கும். நீங்கள் களைப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். உங்கள் செயல்களில் சிறிது கவனமாக இருக்க வேண்டும். உற்சாகமாக இருப்பீர்கள் என்றாலும் திட்டமிடல் அவசியம்.

இன்றைய வேலைகள் மிகவும் கடினமாக இருக்கும். நீங்கள் பொறுமை இழக்க நேரிடலாம். உங்கள் திறமை கேள்விக்குறியாக அமையலாம்.

உங்களின் சுயநலப் போக்கு காரணமாக தம்பதிக ளுக்கிடையேயான உறவு பாதிக்கும். எதிலும் யதார்த் தமாக இருப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை சீராக இல்லை. கூடுதல் செலவினங்கள் நேரலாம்.

இன்று கால் வலி மற்றும் தலைவலி போன்ற உபா தைகளால் நீங்கள் பாதிக்கப்படலாம். குளுமையான உணவுகளைத் தவிர்க்கவும்.




சிறந்த திட்டமிடலின்மை காரண மாக அவநம்பிக்கை உணர்வு எழும். இதனால் உங்கள் தன்னம் பிக்கை குறையும். பிரார்த்தனை மேற்கொள்வ தன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து கடமையைச் செய்யுங்கள்.

உங்கள் எண்ணங்களை சரியாக பரிமாறிக் கொள்ளாததன் காரணமாக கணவன் மனைவி உறவில் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படுகின்றது. உங்கள் செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரிடலாம்.மன அழுத்தத்தின காரணமாக உங்கள் உடல் பகுதிகளில் உபாதைகள் ஏற்படலாம்.




இன்று முற்போக்கான வளர்ச்சி ஏற்படும் நாள். முக்கியமான முடிவு களை நீங்கள் எடுக்கலாம். அது உங்க ளுக்கு நல்ல பலன்களைத் தரும்.

பணியில் இன்று உங்கள் திறமை களை வெளிப்படுத்துவீர்கள். கடினமான பணிகளிலும் உங்கள் திறமை பளிச்சிடும்.

இன்று உங்கள் வாழ்க்கைத்துணையார் மகிழ்ச்சி யுடன் காணப்படுவார். இன்று உங்கள்நண்பருடைய வீட்டு விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக உள்ளது. எதிர்காலத்திற்கு பயன் தரும் வகையில் இன்று சேமிப்பீர்கள்.

இன்று நீங்கள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவீர்கள் என்பதனால் ஆரோக்கியம் மிகச் சிறந்த முறையில் இருக்கும்.




கோவில் திருவிழாக்கள் அல்லது ஆன்மிகக் காரியங்கள் இன்று உங்க ளுக்கு மகிழ்ச்சியைத் தரும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணியில் பிரகாசிப் பீர்கள். இன்று ஓய்வில்லாமல் பணியாற றுவீர்கள். சிறந்த முறையில் திட்டமிட்டு பணிகளைச் செவ்வனே முடிப்பீர்கள்.

இன்று நகைச்சுவை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையின் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதி ஆதாயமான நாள். உங்கள் தேவைக்காக கடன் வாங்குவது பயனளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




வாழ்க்கையின் சாரம் பற்றி இன்று நீங்கள் கற்பீர்கள். இறைவழிபாடு மற்றும் ஆன்மிக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் உங்கள் கவலைகளை மறக்க லாம்.இன்று வேலைகள் அதிகமாக காணப்படும். அதை சரியான முறையில் முடிக்க உங்கள் பணிகளை சரியாக அட்டவணையிட்டு செயலாற்றுங்கள்.

உங்களின் சுயநலப் போக்கு காரணமாக தம்பதிக ளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

இன்று செலவுகள் காணப்படுகின்றது. செலவுகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று கண்களில் எரிச்சல் காணப்படலாம். கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம். அமைதி மற்றும் பொறுமையை கடைபிடியுங்கள்.




இன்று உற்சாகம் குறைந்து காணப் படும். அதன் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இன்று பணிச்சுமை காரணமாக பணியின் பொழுது பொறுமையின்றி காணப்படுவீர்கள். அதனால் அதிருப்தியுடன் காணப்படுவீர்கள்.

இன்று உங்களிடம் கசப்பான உணர்வுகள் காணப் படலாம். உங்கள் நடத்தையில் அது வெளிப்படும். வாழ்க்கைத் துணையாருடன் நட்பான முறையில் அனுக முயலுங்கள்.

இன்று செலவுகளை கட்டுப்படுத்துவது கடினம். உங்கள் கைமீறிப் போகின்ற செலவுகள் காரணமாக சிறிது பணமே கையில் தங்கும்.

இன்று தலைவலி மற்றும் சளி போன்ற உபாதை களால் கவலை ஏற்படும். இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர் கள். உங்களது சிறந்த அனுகுமுறை மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப் பீர்கள். இன்று வெளிப்படையாகப் பேசுவீர்கள்.

கடினமான பணிகளையும் இன்று எளிதில் முடிப்பீர்கள். திருப்தியும் அடைவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். ஒருவருக்கொருவர் சரியாக உருவாகியது போல் உணர்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். அதிக நேர உழைப்புக்கான ஊக்கத்தொகை உங்களது பணவரவை அதிகரிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04-06.2024




இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் வெற்றிகரமான பலன்களைக் காண்பீர்கள். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்குவீர்கள். உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவீர்கள்.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே வேலைகளை முடித்து உங்கள் திறமையை நிரூபிப்பீர்கள். மேலதிகாரியின் பாராட்டுகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையுடன் உண்மையான அனுகுமுறையைக் கையாள்வீர்கள். அவரும் உங்களை நல்ல முறையில் புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை இன்று சீராக உள்ளது. இன்று பணத்தை சேமிப்பீர்கள். இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நீங்கள் சில ஏமாற்றங்களை சந்திக்க வாய்ப்பு உள்ளது. எனவே உங்கள் செயல்களை திட்டமிட்டு அதன்படி செயலாற்றுங்கள்.

இன்று தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். பணிகளை மெதுவாகச் செய்வீர்கள். வேலை செய்யும் முறையை முன்கூட்டியே திட்டமிடுவது நல்லது.

நீங்கள் களைப்பாக காணப்படுவீர்கள். அது உங்கள் நடத்தையில் வெளிப்படும் அது நல்லுறவை பாதிக்கும்

இன்று அதிக செலவுகள் காணப்படும். அதற்காக நீங்கள் கடன் வாங்க நேரிடலாம்.

காய்ச்சல் அல்லது சளி போன்ற உபாதைகளால் பாதிக்கப்படலாம். குளுமையான பதார்த்தங்களை தவிர்த்து விடுங்கள்.




இன்று நீங்கள் எதிர்பார்த்த பலன்களைப் பெறுவீர்கள். உள்ளதைக் கொண்டு வளமோடு இருப்பீர்கள். உங்கள் இனிமையான பேச்சால் பிறரை திருப்தியடையச் செய்வீர்கள்.

திறமையுடன் செயலாற்றுவது இன்று சற்று கடினமாக இருக்கும். பணியில் அதிக கவனத்தை செலுத்த வேண்டும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் உணர்ச்சிப்பூர்வமாக நடந்து கொள்வீர்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக பணத்தை நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

தாயின் உடல் நிலை குறித்து செலவுகள் செய்ய நேரிடலாம்.




இன்று உங்கள் திறமைகளை நன்கு புரிந்து கொள்வீர்கள் உங்கள் விருபத்துக்கு ஏற்றவாறு உங்கள் லட்சியங்களை அமைத்துக் கொள்வீர்கள்.

சிறந்த முறையில் பணியாற்றி மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நல்ல உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

நிதிநிலைமை சீராக இருக்கும். இன்று உங்களால் கணிசமாக சேமிக்க இயலும்.

உங்களின் தன்னம்பிக்கை இன்று உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.









## தென்னாபிரிக்கா அதிரடி

# இலங்கை பரிதாபம்!

இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் தென்னா பிரிக்காவிடம் இலங்கை அணி படுதோல்வியடைந்து ஏமாற்றியது.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் இருபது-20 உலகக் கிண்ணத் தொடர் நடந்து வருகின்றது.

இதில், இலங்கை நேரப்படி நேற்று இரவு 8 மணிக்கு தென்னாபிரிக்கா - இலங்கை அணிகள் மோதிய போட்டி ஒன்று நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி, பதும் நிசங்க (3), கமிந்து மெண்டிஸ் (11) வனிந்து ஹசரங்க (0), சதீரா சமரவிக்ரம (0), குசால் மெண்டிஸ் (19), சரித் அசலங்க (6) ஆகியோர் வரிசையாக "பெவிலியன்" திரும்பினர்.

பின்னர் இணைந்த அனுபவ வீரரான மாத்யூஸ் (17), தசுன் ஷனகா (9) ஜோடியும் சோபிக்கவில்லை.

இறுதியில் இலங்கை அணி 19.1 ஓவர்களில் 77 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

தீக் ஷனா (7) ஆட்டமிழக்காமல் கடைசிவரை களத்தில் நின்றார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில், நோர்டி 4 விக்கெட்டுகளையும் ரபடா, மஹராஜ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் பார்ட்மன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், சுலப இலக்கை விரட்டிய தெனனாபிரிக்க அணியின் ரீசா ஹென்டிரிக்ஸ் (4) ஏமாற்றினார். அணித்தலைவர் மார்க்ரம் (12) நிலைக்கவில்லை. குயின்டன் டி கொக் (20), ஸ்டப்ஸ் (13) ஆகியோரும் ஆட்டமிழந்தனர்.

ஹசரங்க வீசிய 15ஆவது ஓவரில் வரிசையாக ஒரு சிக்ஸர், ஒரு பௌண்டரி விளாசினார் கிளாசன். அவ ரைப்போலவே ஹசரங்கவின் பந்தை பௌண்டரிக்கு விரட்டிய மில்லர் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 16.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 80 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிபெற்றது.

கிளாசன் (19), மில்லர் (6) ஆகியோர் ஆட்டமிழக் காமல் களத்தில் நின்றனர்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில், ஹசரங்க இரு விக்கெட்டுகளையும் துஷார, ஷானக ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் நோர்டி தெரிவானார்.

இருபது - 20 உலகக் கிண்ண அரங்கில் இலங்கை அணி, தனது குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கையைப் (77) பதிவு செய்தது.

இதற்கு முன்னர், 2010, பிரிட்ஜ்டவுனில் அவுஸ் திரேலியாவுக்கு எதிராக 87 ஓட்டங்களுக்குள் சுருண்டது.